# தாயின் தாலாட்டு

அவள் வீரம் நிறைந்த ஒரு தமிழ்ப்பெண். தனது கணவனைப் போருக்கு அனுப்பிவிட்டுத் தாய்நாட்டை மீட்பதற்குச் சென்றுள்ள தனது கணவனின் வீரத்தைத் தன் மனதில் பெருமையுடன் நினைத்தவாறு தன் வீட்டுக் கடமைகளைச் செய்து முடிக்கின்றாள். இரவு படுக்கப்போவதற்கு முன்னர் தனது ஒரே செல்ல மகனைப் பால் குடிக்க அழைக்கின்றாள். அவனோ நிலா வெளிச்சத்தில் பக்கத்துவீட்டுப் பிள்ளைகளுடன் விளையாட ஓடிவிடுவான். தாய் தன் மகன் இன்னும் பால் குடிக்கவில்லையே என்ற ஏக்கத்தில் செல்லமாகச் சினம் கொள்பவள் போல் ஒரு தடி எடுத்து விரட்டுகின்றாள். உடனே அவளது செல்ல மகன் அஞ்சி நடுங்குவான். அதற்கு அந்தத் தாய் கவலையுடன் கோலுக்கே இந்தப்பயம் கொள்கின்ற பிள்ளாய் நீ நாளை வேலுக்குப் போர்முனையில் என்ன பதில் சொல்வாய் எனக் கேட்டுத் தன் செல்லமகனின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளித் தேன் கலந்த பாலைப் பருக்கி விடுவாள். பிள்ளையை வளர்க்கும் போதே நீ தாய் நாட்டுக்காகப் போராடத்தான் பிறந்தாய் எனக்கூறி வளர்க்கும் வீரத் தாய் அவள்.

தன் செல்ல மகனை நன்றாக வளர்த்துவிட்டாள். அவன் இப்போது பெரியவனாகிவிட்டான். இதே நேரம் போருக்குச் சென்றிருந்த அவளது அன்புக் கணவன் நாட்டுக்காக வீரச்சாவடைகின்றான். அவளது உள்ளம் கலங்குகிறது. ஆனாலும் தன் அன்புக் கணவனை இழந்த ஏக்கத்தையும் துக்கத்தையும் தன்னுள்ளே புதைத்துவிட்டுத் தன் கடமையைச் செய்யத் தயாராகின்றாள் அந்த வீரத் தாய். தான் வீரனாய் வளர்த்துவிட்ட தன் அன்புச் செல்ல மகனை அழைக்கின்றாள். உன் தந்தையைக் கொன்றவனைக் கொன்று உன் தாய் நாட்டையும் மீள் என்று உச்சியில் முத்தமிட்டு வீரத் திலகமிட்டு உடைவாளைக் கையில் கொடுத்து போர்க்களம் அனுப்பி வைக்கின்றாள்.

அன்பு வீர மகனும் சிறிதேனும் கலங்காமல் போர்க்களம் சென்று எதிரிகளை வெட்டி வீழ்த்துகிறான். வீரமகன் வீரமுடன் போராடும் தித்திக்கும் செய்திகள் தாய்க்குக் கிடைக்கின்றன. மகனின் வீரத்தை நேரே பார்ப்பதற்குப் போர்க்களம் செல்கிறாள். அங்கே மகனைக் காணவில்லை. எங்கும் எதிரிகளின் உடல்கள் சிதறிக்கிடக்கின்றன. உடனே தாய் மகனே போர்க்களத்தில் பிணமாகி வாழ்கின்றாயா இல்லைப் புற முதுகிட்டுச் செத்துத் தொலைந்தாயா? என்று கேட்டுத் துடித்தாள். வாழ்கிறேன் அம்மா வீரனாக என்ற ஒலி கேட்ட திசை நோக்கி ஓடினாள். மகனே உன் மார்பில் அம்பு தைத்திருக்கிறதே வலி உனக்குத் தாங்காதே என்றாள். தாய் தன் மகனை அள்ளி அணைத்து மடியில் கிடத்தினாள். அம்மா நீ சொல்லும் வரையில் என் உடலில் அம்பு தைத்திருப்பது எனக்குத் தெரியாதே என்றான். அவன் நினைவெல்லாம் தாய் நாட்டை மீட்பதிலே தான் இருந்திருக்கிறது.

‘புலிக்குப் பிறந்தது பூனையாகுமா’ தாயின் மடியில் உயிர் விட்டான் வீர மகன். தாய் ‘‘வாழ்க மகனே தந்தையின் வழித்தோன்றலாய் வாழ்ந்து விட்டாய்’’ என்று பெருமையுடன் தன் மகனை வாழ்த்தினாள். எம் வீரத்தாய்மாரும் தங்கள் பிள்ளைகளைப் போருக்கனுப்பிவிட்டு இப்படித்தான் வாழ்த்தியிருப்பார்களோ. அந்த வீரத் தாய்மார்கள் எங்கிருந்தாலும் வாழ்க.